இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 149 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 23 – செவ்வாய்க்கிழமை 07 ஜனவரி 2025 – சென்னை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 149 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 23 - Tuesday 07 January 2025 - Chennai 16 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டின் நல்வாழ்வு – வளத்திற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி

# மாபெரும் தமிழ்க் கனவை நனவாக்கிவரும் ‘திராவிட மாடல்’ அரசு!

## ஆளுநரின் புறக்கணிப்பை அடுத்து பேரவைத் தலைவர் வாசித்த உரையில் பெருமிதம் !

**சென்னை, ஜன. 7 -**

**சட்டப்பேரவையில் ஆளுநரின் புறக்கணிப்பை அடுத்து அவரது உரையை பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் வாசித்தார். அப்போது பேரவைத் தலைவர் “தமிழ்நாட்டின் நல்வாழ்வு, வளத்திற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி மாபெரும் தமிழ்க் கனவை ‘திராவிட மாடல்’ அரசு நனவாக்கி வருகிறது” என்று கூறினார்.**



சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நேற்று (6.1.2025) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை வாசித்தார்.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் வாசித்த ஆளுநரின் உரை வருமாறு:-

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே!

இப்பேரவையில் 2025ஆம் ஆண்டிற்கான எனது தொடக்க உரையை ஆற்றுவதை நான் பெரும்பேறாகக் கருதுகிறேன். இத்தருணத்தில் அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புத்தாண்டில் அனைவரும் மகிழ்வும் வளமும் பெறவேண்டும் என வாழ்த்து கிறேன். இந்த அரசின் வழிகாட்டியாக விளங்கும் அய்யன் திருவள்ளுவரின் காலத்தால் அழியாத வாக்கினை நினைவுகூர்ந்து எனது உரையைத் தொடங்குகிறேன்.

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு**

(குறள் : 734)

(பசியும், பிணியும், பகையுமற்ற நாடு தான் சிறந்த நாடு எனப் பாராட்டப்படும்)

2. வலுவான கட்டமைப்பையும், முற்போக்கான வளர்ச்சிக் கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்நாடு, இன்று நமது நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரமாகத் திகழ்கிறது. தொன்மையும், புதுமையும் இரண்டறக் கலந்து அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது. முந்தைய ஆண்டுகளில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 சதவீதமாக இருந்த நமது மாநிலத்தின் பங்கு, கடந்த நாற்பது ஆண்டுகளில் 9.21 சதவீதமாக உயர்ந்துள்ளதே திராவிட இயக்கக் கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றிக்குச் சிறந்த சான்றாகும். இந்த வெற்றிப் பாதையில் மேலும் முன்னேறிடும் வகையில், எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்துவதை தமிழ்நாடுதனது இலக்காகக் கொண்டுள்ளது.

3. பொருளாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடு எட்டியுள்ளவளர்ச்சியானது, அதன் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளிலும் பிரதிபலிக்கிறது. இவ்வாறு, பொருளாதார வளர்ச்சி அடைவதுடன் மருத்துவம், கல்வி மற்றும் சமூகநலனையும் மேம்படுத்துவதில் நாட்டிற்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இச்சாதனைக்கு வித்திட்ட தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்களின் சீரிய வழியில், நமது முதலமைச்சர் அவர்களும் எதிர்காலத் தலைமுறைகளின் வாழ்வை செம்மையாக வடிவமைத்திடுவதற்காக பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார்.

### பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்திய கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

4. இந்த அரசின் தலைசிறந்த திட்டங்களுள் ஒன்றான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுத்துள்ளது. அனைத்துக் குடிமக்களின் வாழ்க்கைக்குத் தேவையான கண்ணியமான குறைந்தபட்ச வருமானத்தை உறுதிசெய்வதே சமச்சீர் நோக்குடைய அரசின் கடமையாகும் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், 1.15 கோடி குடும்பங்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாயை இந்த அரசு உரிமைத் தொகையாக வழங்கி வருகிறது. இவ்வாறு பயன்பெறும் குடும்பங்களின் வறுமையை இத்திட்டம் குறைத்துள்ளது மட்டுமன்றி, பெண்களுக்கு உரிய உரிமையும் அதிகாரமும் அளித்ததன் மூலம், குடும்பங்களில் பெண்களின் நிலையினையும் உயர்த்தியுள்ளது.

### மகளிர் விடியல் பயணத்திட்டம் பெண்களின் முன்னேற்றத்திற்கு பேருதவியாக இருக்கிறது!

5. முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ், அன்றாடப் பணிகளுக்காக பெண்கள் கட்டணமின்றிப் பயணிக்க வகைசெய்யும் மகளிர் விடியல் பயணத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில் நமது அரசு நாட்டிற்கே முன்னோடியாக விளங்குகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை 571 கோடிக்கும் மேற்பட்ட பயணங்களை பெண்கள் மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பெண்கள் தங்குதடையின்றிப் பயணம் மேற்கொள்வதால், கடந்த 2021ஆம் ஆண்டில் 32 இலட்சமாக இருந்த பெண்களின் தினசரிப் பயண எண்ணிக்கை தற்போது 57 இலட்சமாக அதிகரித்துள்ளதன் மூலம், பெண்களின் முன்னேற்றத்திற்கு இத்திட்டம் பேருதவியாக விளங்குவது தெளிவாகிறது. இத்திட்டத்தின் பலனாக ஒவ்வொரு குடும்பமும் சராசரியாக மாதம் 888 ரூபாயை சேமிப்பதுடன், பணிச்சூழலில் பெண்களின் பங்களிப்பினையும் மேம்படுத்தியுள்ளதை மாநில திட்டக்குழு நடத்திய ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது.

6. இன்று உலகளவில் பாராட்டப்படும் மதிய உணவுத் திட்டம், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் முதன்முதலாக நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில், சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கியதன் மூலம் தொடங்கப்பட்டதே ஆகும். 1962 ஆம் ஆண்டில் பள்ளிச் சேர்க்கை விகிதத்தை உயர்த்தி, இடைநிற்றல் விகிதத்தைக் குறைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, பெருந்தலைவர் காமராசர் அவர்களால் மாநிலம் முழுவதும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டினைப் போக்கும் வகையில் 1982 ஆம் ஆண்டு இத்திட்டத்தினை சத்துணவுத் திட்டமாக மாற்றினார். மேலும், 1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தில் உணவுடன் முட்டையையும் வழங்கி, உணவில் ஊட்டச்சத்தினை உயர்த்தி இத்திட்டத்தினை மேலும் மேம்படுத்தினார்.

### தமிழ்நாட்டின் வரலாற்றின் பொன்னேடுகளில் பொறிக்கச் செய்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

7. தேசிய அளவில் முத்திரை பதித்த பல்வேறு முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்திய வரலாறு தமிழ்நாட்டிற்கு உண்டு. இம்முயற்சிகளுக்கெல்லாம் மகுடம் சூட்டும் விதமாக, நமது முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை ணவுத் திட்டத்தை’ தொடங்கி தமிழ்நாட்டின் பெயரை வரலாற்றின் பொன்னேடுகளில் பொறிக்கச் செய்துள்ளார். இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ், அனைத்து அரசு தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கும் சூடான, சத்தான காலை உணவு தினந்தோறும் வழங்கப்படுகிறது. இதனால், அவர்களின் வருகையும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது மட்டுமின்றி, ஊட்டச்சத்தும் அதிகரித்து, வகுப்பறையில் அவர்களின் கவனிக்கும் திறனும் மேம்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, கிராமப்புறங்களில் உள்ள 3,995 அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக, தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 34,987 தொடக்கப் பள்ளிகளில் 17.53 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. குழந்தைகளின் நலன் மற்றும் கல்வி வளர்ச்சி மீது இந்த அரசு கொண்டுள்ள அக்கறையையும், அசைக்க முடியாத உறுதிப்பாட்டினையும் எடுத்துக்காட்டும் வகையில் இத்திட்டம் விளங்குகிறது.

### ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்திற்கான நிதியை ஒன்றிய அரசு விரைவில் வழங்க வேண்டும்!

8. மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதில் மாநில அரசு இவ்வாறு உறுதியுடன் செயல்பட்டு வரும் நிலையில், மாநிலத்தின் முயற்சிகளுக்கு ஒன்றிய அரசு தேவையான ஆதரவினை வழங்கவில்லை. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை விடுவிக்கக்கோரி தொடர்ந்து முறையிட்டும், புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஏற்காததைக் காரணமாகக் கூறி, ஒன்றிய அரசு நடப்பு ஆண்டில் இதுவரை எந்தவொரு நிதியையும் விடுவிக்க வில்லை. 2,152 கோடி ரூபாய் அளவில் உள்ள இந்நிலுவைத் தொகையானது, ஆசிரியர்களின் ஊதியம், பள்ளிக் கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ்

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

# ஆளுநரின் செயல் சிறுபிள்ளைத்தனமானது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஜன. 7-**

**“ஆளுநர் தமது உரையை வாசிக்காமலே போயிருப்பது சிறுபிள்ளைத்தனமானது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டு கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

அரசியல் சட்டப்படி, ஆண்டின் தொடக்கத்தில் அரசின் உரையை மாநில ஆளுநர் வாசிப்பது சட்டமன்ற ஜனநாயகத்தின் மரபு! அதை மீறுவதையே தனது வழக்கமாக வைத்துள்ளார் தமிழ்நாடு ஆளுநர். கடந்த ஆண்டுகளில் இருந்ததை வெட்டியும், இல்லாததை ஒட்டியும் வாசித்த ஆளுநர் இம்முறை வாசிக்காமலேயே போயிருப்பது சிறுபிள்ளைத்தனமானது.

தமிழ்நாட்டு மக்களையும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும், நூற்றாண்டு கண்ட தமிழ்நாடு சட்டப்பேரவையையும் தொடர்ந்து அவமதிக்கும் ஆளுநரின் செயல் அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

“தனது அரசியல் சட்டக்கடமைகளைச் செய்யவே மனமில்லாதவர் அந்தப் பதவியில் ஏன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்?” என்பதே அனைவர் மனதிலும் எழும் வினா!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## ஆளுநர் உரையின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவில் தேசிய கீதமும் பாடப்படுவது

# தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் மரபே!

## சட்டப் பேரவையில் அவை முன்னவர் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை, ஜன. 7-**

**சட்டப் பேரவையில் ஆளுநர் உரையின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதும், நிறைவில் தேசிய கீதமும் பாடப்படுவது. தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் மரபின் அடிப்படையில் தான் என்று பேரவையில் அவை முன்னவர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தார்.**



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (6.1.2025), நீர்வளத் துறை அமைச்சரும், அவை முன்னவருமான துரைமுருகன் அவர்கள், அச்சிடப்பட்ட ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ள பகுதிகள் மட்டுமே அவைக்குறிப்பில் பதிவுசெய்திட வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை வருமாறு:-

சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இன்று (6.1.2025) ஆளுநர் உரையின் தொடக்கத்தில் நடந்த சில சம்பவங்கள் தொடர்பாக நான் பின்வரும் விவரங்களை இப்பேரவையின் இசைவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

2023-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 9-ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றியபோது, ஏற்கனவே அவரால் ஒப்பளிக்கப்பட்டு, பேரவையில் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அச்சிடப்பட்ட உரையில் இடம்பெற்றுள்ள சில பகுதிகளை வேண்டுமென்றே விடுத்தும், அச்சிடப்படாத சில பகுதிகளைச் சேர்த்தும் உரையாற்றினார்கள்.

உயர்ந்த மரபுகள் மற்றும் மக்களாட்சித் தத்துவத்தின் அடிநாதமாக, விதையாக விளங்குகின்ற நூறாண்டு வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கண்ணியத்தையும், மாட்சிமையையும்,

தொடர்ச்சி 2–ஆம் பக்கம்